**கூடுதல் மகளிர் நீதிமன்றம், சேலம்.**

**முன்னிலை: திரு.எம்.மதிவாணன், பி.ஏ.,பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,சேலம்.

2023-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை.

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1223/2022**

**(CNR:No.TNSA04-011038 -2022)**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>அனைத்து மகளிர் காவல் நிலையம், அம்மாபேட்டை<br>குற்ற எண்.28/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | நடராஜ் (35/22),<br>த/பெ. மாரிமுத்து,<br>69/3, ஸ்ரீநகர், ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாயக்கன்பட்டி,<br>கன்னங்குறிச்சி(போஸ்ட்), சேலம்-8. |
| குற்றம் முறையிடப்பட்டது | : | ச/பி. 354A (iii), இ.த.ச. மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002 |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரியின் மீது ச/பி. 354A (iii) இ.த.ச. மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002-ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிக்கு எடுத்துரைக்கப்பட்டது. எதிரி குற்றவாளி இல்லை என்று கூறி குற்றத்தை மறுத்துரைத்தார். |
| எதிரியின் வாதுரை | : | குற்றவாளி இல்லை. |
| தீர்மானம் | : | முடிவாக, எதிரியின் மீதான ச/பி. 354A (iii) இதச மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002-ன் கீழான அரசு தரப்பின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு நல்கி, எதிரி குற்றவாளி இல்லை என்று |

தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணைபத்திரங்கள் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கானது 26.12.2022-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.G.நரசிம்மன்,பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், அது சமயம் இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

(1) சேலம் அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில், கடந்த 03.06.2022 ம் தேதி இரவு 08.30 மணிக்கு புகார்தாரர் வனிதா வீட்டிற்கு வெளியே வந்து தனது கணவர் ரமேஷ்பாபு வருகிறாரா என்று பார்த்து நின்று கொண்டிருந்தபோது, எதிரி நடராஜன் புகார்தாரர் வனிதா முன்னால் வந்து நின்று கொண்டு டவுசரை கழற்றி காட்டி புகார்தாரருக்கு மனஉளைச்சலையும், அவமானத்தையும் ஏற்படுத்தியதாகவும், பின்னர் புகார்தாரரின் கணவர் ரமேஷ்பாபு நடராஜனிடம் போய் ஏன் இப்படி செய்கிறாய் போலீசில் புகார் சொல்லவா என்று கேட்டதற்கு எதிரி நடராஜன் ரமேஷ்பாபுவை அடிக்க வந்ததாகவும், அதனை புகார்தாரர் தடுத்தபோது புகார்தாரரின் மேல் எதிரி கையை வைத்து தள்ளிவிட்டு புகார்தாரரை துன்புறுத்திய எதிரியின் செய்கையானது ச/பி. 354A (iii) இதச மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002-ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(2) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கை சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் சான்றாவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் வழங்கப்பட்டது.

(3) அரசு தரப்புக்கும், எதிரிக்கும் போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னர் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கை சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்க குற்றத்தை புரிந்திருப்பார் என்று அனுமானிக்க போதிய அடிப்படை காரணங்கள் இருப்பதாக தீர்மானித்து எதிரி மீது ச/பி. 354A (iii) இ.த.ச. மற்றும் பிரிவு 4 தமிழ் நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிக்கு எடுத்துரைக்கப்பட்டது. எதிரி குற்றவாளி இல்லை என்று கூறி குற்றத்தை மறுத்தார்.

(4) அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(5) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் என்னவென்றால் அ.சா.1 திருமதி.வனிதா அவரது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் பக்கத்து வீட்டில் வசித்து வருவதாகவும், தானும், எதிரியும் சமாதானமாகிவிட்டதாகவும், தான் வீட்டிலிருந்து வரும்போதும், போகும் போதும் எதிரி தன்னிடம் அசிங்கமாக எதுவும் நடந்துகொள்ளவில்லை என்றும், தன்னை தள்ளிவிடவோ, மிரட்டவோ இல்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அதிலுள்ள விவரங்கள் தனக்கு தெரியாது எனவும், சாட்சியமளித்துள்ளார்.

(6) அ.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ள திரு.ரமேஷ்பாபு என்பவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், அ.சா.1 வனிதா தன் மனைவி என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தன் பக்கத்து வீட்டுக்காரர் என்றும், தாங்களும் எதிரியும் சமாதானமாகி விட்டதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், சாட்சியமளித்துள்ளார்.

(7) அ.சா3-ஆக விசாரிக்கப்பட்டுள்ள அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளர் திருமதி.மோகனாம்பாள் அவர்கள் தனது சாட்சியத்தில், கடந்த 13.06.2022 ம் தேதி தான் நிலைய பணியிலிருந்தபோது அ.சா.1 திருமதி.வனிதா

என்பவர் கொடுத்த அ.சா.ஆ 2 புகார் மனுவை பெற்று, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திருமதி.சிவகாமி அதேநாள் 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜசேகர், ரவிசந்திரன் இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் வழக்கின் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாவும், பின்னர் அதேநாள் 16.45 மணிக்கு கோரிமேடு சோதனை சாவடி அருகே வைத்து எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், பின்னர் புலன் விசாரணையை முடித்து, எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பப்பட்டது.

(8) மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)வின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் கூறியது பொய் என்று மறுத்தார். பின்னர் எதிரியின் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

(9) இந்நிலையில், இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரியின் மீதான ச/பி.354(A)(iii) இ.த.ச. மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002-ன் கீழான அரசு தரப்பின் குற்றச்சாட்டுகளானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

(10) எதிரியின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் புகார்தாரரும், பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 திருமதி.வனிதா என்பவர் இந்த வழக்கில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார் என்றும், எனவே எதிரியின் மீதான அரசுத் தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்றும், தன்னுடைய எதிர் வாதத்தை முன் வைத்துள்ளார்.

(11) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசிலீக்கப்பட்டது. இந்த வழக்கானது அரசுத் தரப்பு சாட்சி.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ள திருமதி.வனிதா என்பவர் கொடுத்த புகாரின் பேரிலேயே வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன்

விசாரணை முடிக்கப்பட்டு, எதிரியின் மீது மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 திருமதி.வனிதா என்பவர் தான் இவ்வழக்கின் புகார்தாரரும், பாதிக்கப்பட்ட நபரும் ஆவார். மேற்படி அ.சா.1 திருமதி.வனிதா என்பவரால் கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலமானது அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(12) புகார்தாரரான அ.சா.1 திருமதி.வனிதா அவரது முதல் விசாரணை சாட்சியத்தில், எதிரி தன்னிடம் அசிங்கமாக எதுவும் நடந்துகொள்ளவில்லை என்றும், தன்னை தள்ளிவிடவோ, மிரட்டவோ இல்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அதிலுள்ள விவரங்கள் தனக்கு தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளதை பார்க்க முடிகிறது. அ.சா.1 திருமதி.வனிதா அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் அரசுத் தரப்பு வழக்கிற்கு எதிராகவே சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 வனிதா இவ்வழக்கில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

(13) அ.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ள திரு.ரமேஷ்பாபு தனது நீதிமன்ற சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதை பார்க்க முடிகிறது. அ.சா.2 ரமேஷ்பாபு என்பவரும்கூட இவ்வழக்கில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மோகனாம்பாள் என்பவர் அ.சா.3-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(14) இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள மொத்தம் மூன்று சாட்சிகளில் புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 திருமதி.வனிதா மற்றும் அ.சா.2 திரு.ரமேஷ்பாபு ஆகிய இருவரும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள். முக்கிய சாட்சியான அ.சா.1 திருமதி.வனிதா என்பவரே பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால், விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

.

(15) எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுகள் மேலே பரிசீலிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்க தவறியுள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(16) முடிவாக, எதிரியின் மீதான ச/பி. 354A (iii) இதச மற்றும் ச.பி. 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002-ன் கீழான அரசு தரப்பின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு நல்கி, எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணைபத்திரங்கள் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணி தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 -ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MATHIVANAN
Digitally signed by M MATHIVANAN
Date: 2023.12.22 16:38:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

சேலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திருமதி.வனிதா

அ.சா.2 திரு.ரமேஷ்பாபு

அ.சா.3 திருமதி.மோகனாம்பாள்(உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1-ன் கையொப்பம்.

அ.சா.ஆ.2 அசல் புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 பார்வை மகசர்

அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்

**எதிரி தரப்பு சாட்சிகள்** - **இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** -**இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** - **இலலை**

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்** - **இல்லை.**

M MATHIVANAN

Digitally signed by M MATHIVANAN
Date: 2023.12.22 16:38:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம் ,

சேலம்.

குறிப்பு

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.